# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முறையீட்டு மனு எண்.122/2017/பே.2**
**ஆணை எண். 307/2017 நாள் 29–12–2017**

**திரு கி.ராஜவேலு,**
**தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை**
**பணியளர்கள் சங்கம்,**
**எச்.4, பாலார் கார்டன்,**
**சத்துவாச்சாரி,**
**வேலூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.**

**திரு எஸ். முரளி,**
**பதிவறை எழுத்தர்,**
**பள்ளிகொண்டா பேரூராட்சி,**
**வேலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்**

**ஆணை**

திரு சி. ராஜவேலு, H-4,பாலார் கார்டன், சத்துவாச்சாரி, வேலூர் என்பவரது 27.05.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 29.05.2017 அன்று வரப்பெற்றது. முறையீட்டு மனு எண் 122/2017/ ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு தொடர்பாக உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணை / வாக்குமூலங்களின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர், தனது புகார் மனுவில், வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா பேரூராட்சியில் திரு எஸ். முரளி என்பவர் குடிநீர் திட்டப் பணியாளராக பணியில் சேரும்போது 28 வயது எனவும், இவர் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தை சார்ந்தவர் என்பதால் பணியில் சேர அதிகபட்ச வயது வரம்பு 25 முதல் 27 என இருக்கும்போது, இவர் அதிகபட்ச வயது வரம்பை கடந்து பணியமர்த்தப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பணியாளரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டவழக்கில் நீதிப்பேராணை எண் W.P.No.36597/2016–ல் அவர் 01.07.1998ல் பள்ளிகொண்டா பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக நேரடியாக நியமனம் செய்யப்பட்டதாக, தவறான தகவலை நீதிமன்றத்தில் அளித்துள்ளதாக தெரிவித்து 19.10.2016 நாளிட்ட நீதிமன்றத் தீர்ப்பின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் திரு எஸ். முரளி என்பவர் வேலூர் மாவட்டத்தில் உள்ள Tender System மூலம் பணியமர்த்தப்பட்டுள்ள கணினி இயக்குநர்களை பணி நிரந்தரம் செய்வதாக உறுதி அளித்து திரு சேகர் மற்றும் திரு பூங்காவனம் எவர்களுடன் சேர்ந்து பணம் வசூலிப்பதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. கணினி இயக்குநர்கள் பணி நிரந்தரம் தொடர்பான ஒரு கோப்பு உயர் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து இது குறித்து விசாரணை நடத்தவும் கோரியுள்ளார்.

மேலும் திரு எஸ். முரளி, என்பவர் பள்ளிகொண்டா பேரூராட்சியினை பொறுத்தவரை எந்த செயல் அலவலர்கள் பணியில் சேர்ந்தாலும் அவர் சொல்படிதான் நடக்கவேண்டும் என அதிகார வரம்பு மீறி செயல்படுவதாகவும் இவர் வேலூர் காந்தி நகரில் கோடிக்கணக்கிலான மதிப்புள்ள வணிக வளாகம், வீடுகள், வீட்டு மனைகள் வாங்கியுள்ளார் எனவும் தனது மனுவில் குறிப்பிட்டு விசாரணை நடத்த மனுதாரர் கோரியுள்ளார்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 06.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண் 210/2017/நாள் 30.06.2017ல் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் தொடர்பான விளக்கத்தினை அளிக்க பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலர், மற்றும் குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் திரு எஸ். முரளி ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 16.10.2017 அன்று நேரில் ஆஜராக கோரி இம்முறைமன்ற நடுவ 24.08.2017 ன் அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலர் திரு S.Y.நிஷாத், இம்முறை மன்ற நடுவத்தில் 16.10.2017ல் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......மனுதாரர் திரு ராஜவேலு என்பவருடைய 27.05.2017ம் நாளிட்ட மனு தனக்கு கிடைக்கப்பெற்றதாகவும், அதன் விவரங்கள் குறித்து 30.06.2017ல் அறிக்கை சமர்ப்பித்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள திரு எஸ். முரளி என்பவர் பணியில் சேரும்போது 28 வயது பூர்த்தியாகவில்லை எனவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 164/நாள் . 02.11.2015ல் திரு எஸ். முரளி என்பவரை பதிவறை எழுத்தராக நியமனம் செய்தது தொடர்பான செயல் அலுவலரின் செயலை ஏற்றுக் கொண்டதாக அரசு ஆணையிட்டுள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். நீதிமன்றத்தில் தவறான தகவல் எதிர் மனுதாரர் அளித்தார் என்ற குற்றச்சாட்டு சரியானது அல்ல எனவும் இதில் செயல் அலுவலர் எதிர் மனுதாரராக சேர்க்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் குடிநீர் இயக்குபவர்கள் சம்பந்தமாக குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானது என தெரிவிதுள்ளர். மேலும் திரு எஸ். முரளி என்பவர் வருகின்ற செயல் அலுவலர்கள் அனைவரையும் மிரட்டுகிறார் என்று சொன்னால் சரியல்ல எனவும், திரு எஸ். முரளி, வேலூர் காந்தி நகரில் வணிக வளாகம், வீடுகள், வீட்டு மனைகள் ஆகியவை வாங்கியது குறித்து எவ்வித தகவலும் தனக்கு தெரியாது

முன் அனுமதியும் பெறவில்லை என தனது
எனவும் இது குறித்து பேரூராட்சியில் எந்தவிதமான
வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு எஸ். முரளி, பதிவறை எழுத்தர், பள்ளிகொண்டா பேரூராட்சி இம்முறைமன்ற
நடுவத்தில் 16.10.2017ல் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

"......தான் பள்ளிகொண்டா பேரூராட்சியில் 16.04.2009 முதல் பணியில் இருப்பதாகவும், அதற்கு முன்னர் இதே பேரூராட்சியில் குடிநீர் திட்டப் பணியாளராக பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார். தனது பிறந்த தேதி 01.01.1971 எனவும், தான் பணியில் சேர்ந்தபோது இது குறித்து யாரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மனுதாரர் நடத்தும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை சங்கத்தில் தன்னை சேரும்படி கூறியதாகவும் தான் எந்த சங்கத்திலும் உறுப்பினராக இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு பூங்காவனம், மற்றும் திரு சேகர் ஆகியோர் பணம் வசூல் செய்தார்கள் என்று சொல்வது சரியல்ல எனவும் தெரிவித்துள்ளார். தன்னிடம் பொதுமக்கள் சில குறைபாடுகள் சொல்வார்கள் எனவும் அனைத்தும் அடிப்படை வசதிகள் தொடர்பான குறைபாடுகள் என்பதால் தான் உடனே செயல் அலுவலருக்கு தகவல் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். தான் பார்ப்பது பதிவறை எழுத்தர் பணி எனவும், இனி வருங்காலங்களில் தான் இந்த பணியினை மட்டுமே பார்ப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் உறுதி அளித்துள்ளார். தான் வேலூர் அருகில் உள்ள காட்பாடியில் குழந்தைகள் படிப்பிற்காக குடியிருப்பதாகவும், தினமும் பள்ளிகொண்டா சென்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். தான் காட்பாடியில் கதவு எண் 70, திருவள்ளுவர் நகர் மெயின்ரோடு, ஜோதி நகர் , காட்பாடி என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இது தன்னுடைய சொந்த வீடு எனவும் தெரிவித்துள்ளார். இந்த வீடு 2008 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகவும், அது தன்னுடைய மனைவியின் பெயரில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன் அடிமனை 2400 சதுர அடி எனவும், தரைதளம் 700 சதுர அடியும் முதல் தளம் 700 சதுர அடியும், இரண்டாவது தளம் 200 சதுர அடியில் ஒரு அறை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். காட்பாடியில் காந்தி நகரில் DHFL என்கிற நிறுவனத்தில் ரூ.6.00 லட்சம் கடன் பெற்று வீட்டை கட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். 2005 ம் ஆண்டு தன் மனைவியின் பெயரில் இடம் வாங்கியதற்கு பேரூராட்சி செயல் அலுவலரிடம் அனுமதி வாங்கியுள்ளதாகவும், இது தன் பணிப்பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். தன்னுடைய வீட்டில் இரண்டு கடைகள் கட்டி தலா ரூ 500/-க்கு வாடகைக்கு விட்டிருப்பதாகவும், அதில் ஒன்றில் மளிகை கடையும் மற்றொன்றில் முட்டைக் கடையும் உள்ளதாக தெரிவித்துள்ளார். இது தவிர வேறு பகுதியில் தனக்கு வீடுகளோ, வீட்டு மனைகளோ கிடையாது எனவும் மேலும் நிதி நிறுவனம் அல்லது வங்கியில் தன் பெயரிலோ அல்லது தனது குடும்பத்தினர் பெயரிலோ எந்த வைப்புத் தொகைகளோ, முதலீடுகளோ இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

பள்ளிகொண்டா
இதனைத் தொடர்ந்து, முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கக் கடிதம் வாக்குமூலம், குற்றம் சாட்டப்பட்டுள்ள பதிவறை எழுத்தர் திரு எஸ். முரளி என்பவரது நேரடி வாக்குமூலம் ஆகிய ஆவணங்களின்

நகல்கள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு இது குறித்து தல ஆய்வு மேற்கொண்டும் பேரூராட்சியின் ஆவணங்களை பரிசீலித்தும் நிலம் வாங்கியுள்ளது தொடர்பாக சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேடு ஆகியவைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் 2014, பிரிவு 6(4) (a) ன் கீழ் 02.11.2017ம் நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் தனது கடித ந.க.எண். 2154/2017/ஆ/நாள் 21.11.2017ன் படி தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் தனது அறிக்கையில், அரசாணை(நிலை) எண். 205/ஊரக வளர்ச்சித்துறை/ நாள் 23.03.1989 ன்படி குடிநீர் திட்டம் தொடர்பான அனைத்து பணியிடங்களுக்கும் ஜூலை 1-ஆம் தேதிய நிலையில் 28 வயது முடிந்திருக்கக்கூடாது என ஆணையிட்டுள்ளதாகவும், திரு ச. முரளி என்பவரின் பிறந்த தேதி 01.01.971 எனவும், இவர் 21.10.1997ல் தனது 26வயது 10 மாதம் 21வது நாளில் பணியில் சேர்ந்துள்ளார் என்பதை தெரிவித்து அதற்கான பணிப்பதிவேட்டின் நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். 28 வயது முடிய 1 வருடம், 2 மாதம் 10 நாட்களுக்கு முன்னரே இவர் பணியமர்த்தப்பட்டுள்ளார் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டு 1.4.1998 லும், 22.05.1998 லும், மீண்டும் பணியமர்த்தப்பட்டு 01.07.1998 முதல் தொடர்ந்து குடிநீர் பணியாளராக பணிபுரிந்து வருகிறார் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 3 முறை தற்காலிக (பணியிடம் இன்மையால்) பணி நீக்கம் செய்யப்பட்டு 4 வது முறையாக அவர் பணியில் சேரும்போது அவருடைய வயது 27 வருடம் 6 மாதம், ஆகும் எனவும் இவருக்கு 31.12.1998ல் தான் 28 வயது நிறைவடைகிறது எனவும் 28 வயது முடிய 6 மாதத்திற்கு முன்னரே பணியில் சேர்ந்துள்ளதால் இக்குற்றச்சாட்டு தவறனது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு ச.முரளி, 16.04.2009ல் பதிவறை எழுத்தராக பதவி உயர்வு பெற்றுள்ளதாகவும், அரசு விதிகளின்படி அலுவலக உதவியாளர் பதவியிலிருந்துதான் பதிவறை எழுத்தராக பதவி உயர்வு பெற வழி வகை உள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதற்கு பேரூராட்சியின் உதவி இயக்குநர் கீழ்கண்டவாறு தனது அறிக்கையில் பதில் சமர்ப்பித்துள்ளார்.

குடிநீர் திட்டப் பணியாளர், அலுவலக உதவியாளர், மற்றும் பதிவறை எழுத்தர் போன்ற பணியிடங்களின் நியமன அலுவலர் அந்தந்த பேரூராட்சியின் செயல் அலுவலர் ஆவார் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் உயர் நீதி மன்ற நீதிப்பேராணை எண். 36597/2016 19.10.2016ம் நாளிட்ட ஆணையில், பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலரது ஆணையின்படி 01.07.1998-ல் துப்புரவு பணி மேற்பார்வையாளராக நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், திரு ச.முரளி, குடிநீர் திட்டப் பணியாளரால் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணியமர்த்தப்பட்டதாக தனியாரால் தகவல் அளிக்கப்பட்டதாக உயர்நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அரசு மூலம் உயர்நீதி மன்றத்திற்கு அளிக்கும் எதிர்

உறுதி ஆவணம் மற்றும் தகவலில் பணி நியமன ஆணை மற்றும் பணிப்பதிவேட்டின் நகல்கள் வழங்கப்பட்டிருக்கும் எனவும், அரசு செயலர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் சார்பாக எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யும்போது தகவறான தகவல் அளிக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி ஆணையில் தவறுதலாகவே துப்புரவு பணி மேற்பார்வையாளர் என குறிப்பிட்டிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாணை (பல்வகை) எண் 164/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள் 02.11.2015 ல் திரு ச.முரளி என்பவருக்கு குடிநீர் திட்டப் பணியிலிருந்து பதிவறை எழுத்தராக பதவி உயர்வு வழங்கியமைக்கான விதி தளர்வு ஆணை பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து மேற்படி ஆணையின் நகலினையும் இணைத்து தனது அறிக்கையினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்பந்த பணியிடமான பேரூராட்சிகளில் பணிபுரியும் கணினி இயக்குபவர்களை பணி நிரந்தரம் செய்ய திரு ச. முரளி மற்றும் திரு பூங்காவனம் ஆகியோரால் பணம் வசூலிப்பதாக புகார் ஏதும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு வரப்பெறவில்லை எனவும், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து பேரூராட்சிகளிலும், 13 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் கணினி இயக்குபவர்களை சிறப்பின நிகழ்வாக ஈர்த்துக் கொள்ள உரிய ஆணை கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்தில் கோப்பு நிலுவையில் உள்ளதாக தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் தெரிவித்துள்ளார். மேலும் கணினி இயக்குபவர்களின் கல்விச் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு பணியாளர்கள் குறித்த விவரங்களை 9/2017ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு இப்பொருள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் திரு ச. முரளி மற்றும் திரு பூங்காவனம் மூலம் நிரந்தரம் செய்வதாக கூறுவது முற்றிலும் தவறான தகவல் எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு ச. முரளி, என்பவர் வேலூர் காந்தி நகரில் வணிக வளாகம், வீடுகள், வீட்டு மனைகள் வாங்கியுள்ளதாக தெரிவித்த புகார் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் தனது அறிக்கையில் திரு ச. முரளி, தனது மனைவியின் திருமண சீதனமாக அளிக்கப்பட்ட நகைகள், மற்றும் பொருட்களை விற்றதன் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையைக் கொண்டு காட்பாடி கிராமம் சர்வே எண் 686-ல் 2981 சதுர அடி காலி மனை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள திருப்பதி மாவு மில் உட்பட 2004 – ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கியுள்ளதாகவும், அதற்கு அலுவலகத்தின் அனுமதி பெற்றுள்ளதாகவும் இது குறித்து இவரது பணிப்பதிவேடு பக்கம் எண் 19-ல் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இதைத் தவிர வேறு சொத்துக்கள் ஏதும் வாங்கியதாக பதிவுகள் ஏதும் இல்லை எனவும் மேற்தெரிவித்துள்ள விவரங்களின்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் தவறானது, முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்ட திரு ச. முரளி என்பவரது பணி நியமனம் தொடர்பாக மேற்கண்டவாறு உரிய விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும் மனுதாரர் கூறியுள்ளது போல் மேற்படி பணியாளர் நீதிமன்றத்தில் தவறான தகவல் அளித்துள்ளார் என கருதும் பட்சத்தில் நீதிமன்றத்தின் மூலமே உரிய தீர்வு காணப்பட்டிருக்கவேண்டும். மேலும் தவறான தகவல்களை அளித்தமை குறித்து போதிய ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்படவில்லை. கணினி இயக்குபவர்கள் பணிநிரந்தரம் பொருள் தொடர்பான லஞ்ச புகார்கள் குறித்தும் உரிய மறுப்பறிக்கை மேற்கண்டவாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை.

ஆனால் மேற்படி பணியாளரது சொத்துக்கள் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கும், சம்பந்தப்பட்ட பணியாளர் இம்முறைமன்ற நடுவத்தின் முன் நேரில் அளித்துள்ள வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தனது சொத்துக்கள் தொடர்பான விவரங்களுக்கும் வேறுபாடு உள்ளது. எனவே இது குறித்து உரிய விசாரணை / ஆய்வு மேற்கொண்டும் ஆவணங்களைப் பரிசீலித்தும் தக்க துறை ரீதியான நடவடிக்கைகளை உரிய விதிகளின்படி மேற்கொள்ளுமாறு பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலருக்கும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கும் ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் வருடம் டிசம்பர் திங்கள் 29– ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

செயலாளர் 3/1/18

பெறுநர்

1.திரு கி.ராஜவேலு,
தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை
பணியாளர்கள் சங்கம்,
எச்.4, பாலார் கார்டன்,
சத்துவாச்சாரி,
வேலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
பள்ளிகொண்டா பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம், வேலூர்–9.

4.பேரூராட்சிகள் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை.